DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

*******

IN THE COURT OF DISTRICT MUNSIF–CUM–JUDICIAL MAGISTRATE,

**PALLAVARAM.**

| | |
|---|---|
| CC.No. | 389/2025 |
| Prosecution: | அ.சா.1 |

| | | |
|---|---|---|
| **Deposition of witness for Name** | ~ | மனோஜ்குமார் |
| **Father/Husband' Name** | ~ | பால்ராஜ் |
| **Village** | ~ | |
| **Taluk** | ~ | |
| **Caste** | ~ | |
| **Calling** | ~ | |
| **Religion** | ~ | |
| **Age** | ~ | |

Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 on the day **of Dt. 20.08.2026.**

**முதல் விசாரணை**

1. நான் தற்போது சைதாப்பேட்டையில் குடியிருந்து பெட்ரோல் பங்கில் வேலை செய்து வருகிறேன். கடந்த 2018 ஆம் ஆண்டு மே மாதம் 19 ஆம் தேதி இரவு 11.50 மணிக்கு தாம்பரத்திலிருந்து சைதாப்பேட்டை செல்வதற்காக பல்சர் 220 TN 09 CC 1361 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தில் நான் வந்துகொண்டிருந்தபோது தாம்பரம் பேருந்து நிறுத்தத்திலிருந்து சற்று தள்ளி ஒரு நபர் எனது இருசக்கர வாகனத்தில் லிப்ட் கேட்டார். நான் அவரை இருசக்கர வாகனத்தில் ஏற்றிக்கொண்டு வரும்போது தாம்பரம் அரசு மருத்துவமனை பாலம் அருகே கீழே வந்துகொண்டிருந்தபோது எனது இருசக்கர வாகனத்தின் முன்னால் சென்றுகொண்டிருந்த ஒரு டாடா கார் 4689 என முடியும் பதிவெண் கொண்ட கார் சென்றுகொண்டிருந்தது.

2. அந்த கார் ஓட்டுநர் வலதுபுற இன்டிகேட்டர் போட்டுவிட்டு சென்றபோது நான் இடதுபக்கத்தில் எனது வாகனத்தை ஓட்டி சென்றபோது அந்த காரின் ஓட்டுநர் இடது பக்கமாக ஓட்டியதால் எனது இருசக்கர வாகனத்தை என்னால் கட்டுப்படுத்த முடியாததால்

கார் மோதி நானும், எனது இருசக்கர வாகனத்தில் பின்னால் அமர்ந்து வந்தவரும் கீழே விழுந்துவிட்டோம். அப்போது அந்த கார் நின்றுவிட்டது. அங்கிருந்த நபர்கள் அந்த காரின் ஓட்டுநரை பிடித்துவிட்டார்கள். கீழே விழுந்தததில் எனக்கு தலை, முகம் ஆகிய இடங்களில் காயம் ஏற்பட்டது.எனக்கு பின்னால் உட்கார்ந்து வந்த நபருக்கு தலையில் காயம் ஏற்பட்டு அவரை விபத்து நடைபெற்ற இடத்தின் அருகே இருந்த அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தார்கள். அவர் 3 நாட்கள் சிகிச்சையில் இருந்து இறந்துவிட்டதாக கேள்விபட்டேன். என்னுடன் இருசக்கர வாகனத்தில் வந்த நபர் பெயர் வசந்த் என தெரிந்துகொண்டேன். அவரது குடும்பத்தினர் அங்கு வந்து சொன்னதன்பேரில் அவரது பெயரை தெரிந்துகொண்டேன். அந்த காரை ஓட்டி வந்த நபரை நான் பார்த்தேன். தற்போது ஆஜரிலுள்ள எதிரிதான் அந்த காரின் ஓட்டுநராவார்( எதிரி ஆஜர்,சாட்சி எதிரியை அடையாளம் காட்டினார்). காயம்பட்ட என்னை மேற்படி அரசு மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை எடுத்துக்கொண்டேன். அதன்பின்னிட்டு மறுதினம் விபத்து தொடர்பாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் நான் கொடுத்ததுதான். அந்த **புகார் அ.சா.ஆ. 1 ஆக குறியீடு** செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி தரப்பில் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அறிவுறுத்தியும் குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை. எனவே எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என சாட்சியம் முடிக்கப்பட்டது.

S/d xxxx

Typewritten to my dictation in open court read over to the witness in tamil in the presence of the accused and admitted by the witness to be correct

**S/d. C.P. Mullai Vanan**

District Munsif-cum Judicial Magistrate,

Pallavaram

<u>DEPOSITION OF WITNESS</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)
*******

IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE,

**PALLAVARAM.**

| | |
|---|---|
| CC.No. | 389/2025 |
| Prosecution: | அ.சா.2 |

| | | |
|---|---|---|
| **Deposition of witness for Name** | ~ | பால்ராஜ் |
| **Father/Husband' Name** | ~ | கொண்டையா |
| **Village** | ~ | |
| **Taluk** | ~ | |
| **Caste** | ~ | |
| **Calling** | ~ | |
| **Religion** | ~ | |
| **Age** | ~ | |

<u>Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 on the day **of Dt. 20.08.2026.**</u>

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது சைதாப்பேட்டையில் குடியிருந்து தனியார் நிறுவனத்தில் வேலை பார்த்து வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரிலுள்ள இரண்டாவது கையொப்ம் என்னுடையது. அ.சா.1 எனது மகனாவார். கடந்த 20 5 2018 அன்று அதிகாலை 3 மணி அளவில் போக்குவரத்து போலீசார் எனக்கு போன் செய்து எனது மகனுக்கு விபத்து ஏற்பட்டதாக தகவல் சொன்னார்கள். நான் விபத்து நடைபெற்ற இடமான குரோம்பேட்டை எம் ஐ டி மேம்பாலம் அருகே சென்று இருந்தேன் அங்கு போலீசார் விபத்து நடைபெற்ற இடத்தை பார்வையிட்டு வரைபடம் வரைந்தார்கள் அதில் என்னை சாட்சியாக இருக்குமாறு கேட்டுக் கொண்டதின் பேரில் நான் சாட்சியாக இருந்து சாட்சி கையொப்பம் செய்து கொடுத்தேன். பார்வை மகஜரிலுள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது. **பார்வை மகஜர் அ.சா.ஆ. 2 ஆக குறியீடு** செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி தரப்பில் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அறிவுறுத்தியும் குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை. எனவே எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என சாட்சியம் முடிக்கப்பட்டது.

S/d xxxx

Typewritten to my dictation in open
court read over to the witness in tamil
in the presence of the accused and
admitted by the witness to be correct

**S/d. C.P. Mullai Vanan**

District Munsif-cum Judicial Magistrate,

Pallavaram